13 ஜூன் 2021

Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 11ம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

**கலாச்சார எல்லைகளை இணைப்போம்**

# அறுவடையில் ஆண்டவனின் அருள்

கிழக்கு மலேசியர்களுக்கு அறுவடை திருவிழாக் கொண்டாட்டங்கள் ஆண்டுத்தோறும் நிகழும் நிகழ்ச்சி. சபா மக்கள் மே மாத இறுதியிலும் (Kaamatan), சரவா மக்கள் ஜூன் தொடக்கத்திலும்(Gawai) அறுவடை திருநாளைக் கொண்டாடுகின்றனர். தீபகற்ப மலேசியத் திரு அவை ஜூன் மாதத்தில் கிழக்கு மலேசியர்கள் (இந்தோனேஷியர்களும்) உடன் சேர்ந்து இரண்டு அறுவடை திருநாள்களை, அறுவடைக்காக கடவுளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கொண்டாடுகின்றது.



Image: ©123rf.com

இந்த இரு திருநாள்களும் இனம், சமயத்தைக் கடந்து, பண்பாட்டு ரீதியில் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துகிறது. பண்பாட்டும் சமயமும் ஒன்று கலந்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. உண்மையில், இன்றைய தலைமுறைக்கு அறிந்த வரை, கிழக்கு மலேசியர்கள் நல்லிணத்துடன் ஒருவருக்கொருவர் நட்பு பாராட்டி வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

இன்றைய மாற்கு நற்செய்தியும் விதை விதைக்கும் செய்தியைத் தருகிறது. விவசாயத்துடன் தொடர்புடைய மக்களுக்கு விவசாய மொழியில் இயேசு உவமையில் போதிக்கிறார். இறையரசு பற்றித் தெரிவிக்கும் போது, விதைப்பவன் விதைக்கிறான், அவை சொந்தமாக வளர்கின்றன. அவை எவ்வாறு வளர்கின்றன என்பது அவனுக்குத் தெரியாது. ஆனால் அறுவடையில் ஆண்டவனின் அருள் பலனளிக்கிறது.

காலமும் நேரமும் எந்த மனிதனுக்கும் காத்திருக்காது, அவ்வாறே ஆண்டவரும். அவர் விதைத்துக் கொண்டே இருப்பார். எல்லா மக்களிடமும் விதைக்கும் அன்பு அவரது எண்ணப்படி நடக்கும். செடி கொடிகள் பூ பூத்து கனி கொடுப்பது போல், மக்களிடையே நல்லிணக்கக் கனி காய்க்கும்.

பல்லின சமய, பண்பாட்டு கொண்ட நாட்டில் வசிக்கும் கிறிஸ்துவர்களாகிய நாம், இறையரசு சிந்தனைப் போக்கைக் கொண்டிருக்க வேண்டும். 'நான்' 'எனது' என்ற மனப்போக்கை களைவதில் தொடங்க வேண்டும். பெரிய செயல்களைச் செய்ய வேண்டாம். ஆண்டவனின் விளம்பரப் பலகையாக நாம் இருப்போம். சக பயணிகளுக்குச் சரியான பாதையைக் காட்டுவோம். நம்மில் பெரும்பாலோருக்கு, நமது பணி திரைமறைவாக இருக்கும். அவ்வளவு முக்கியமாகவும் இருக்காது. ஆனால் இயேசு நம்மிடம் பேசுவது இவ்விதமே. சிறு விதையே பெரிய மரமாக மாறுகின்றது என்பது விதை உவமையின் உண்மை. அவரது பெயரில் செய்யும் செயல்கள் நமது கற்பனைக்கு எட்டா பலனைத் தரும். உங்களைப் பொறுத்த மட்டில், விதைப்பவர் ஆண்டவன், வளர்வதையும் காப்பதையும் அறுவடையையும் அவர் பார்த்துக் கொள்வார்.

உமது ஆட்சி வருக, உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக.

மனனம் செய்ய இந்த வார வசனம்:

"ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று; உன்னதரே! உமது பெயரைப் புகழ்ந்து பாடுவது நன்று."

(திப. 91: 1)

**இன்றைய வாசகங்கள்:**

எசே. 17, 22-24;
திப. 92, 1-2,12-13, 14-15;
2 கொரி. 5, 6-10;
மாற்கு 4, 26-34.

INTERNAL CIRCULATION ONLY
BUL 24/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org